## சென்னை 3ம் வட்ட தொழிலாளர் உதவி ஆணையர்(அமலாக்கம்) அவர்களின் செயல்முறை ஆணைகள்

### முன்னிலை : திருமதி.சு.ரேவதி, பி.காம்.,எம்.எல்.எம்.,டி.எல்.எல்.,

### சுருக்கம்

பணிக்குழு – தொழிலாளர் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் 2018-2019 மற்றும் 2019-2020 வரையிலான காலத்திற்கு தேர்வு செய்யப்பட்டு இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணியில் சேர்ந்துகொண்டது – பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணைகள் வழங்குதல் - தொடர்பாக.

---

ந.க.எண்.அ/571/2020

நாள்: 10.08.2021

படிக்கப்பட்டது:

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடித எண்.2387/PSD-I/2020,நாள்:28.05.2020.
2. சென்னை-6, தொழிலாளர் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள் எண்.ஜி3/16386/2020-1, நாள்: 29.07.2020.

*******

**ஆணை :**

பார்வை 1-ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதத்தில், தொழிலாளர் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்களின் பணியினை அவர்கள் பணியில் சேர்ந்தநாள் முதல் பணிவரன்முறை செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதால், தனியரின் பணியினை தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில், தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்தும், தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் விதி23(ஏ)(i)-ன்படியும், தமிழ்நாடு அமைச்சுப்பணியின் பொதுவிதி 32-ன் கீழ் தனியரை பணியில் சேர்ந்த நாள் முதல் தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to the recruitment to the post included in Coimbined Civil Service Examination - IV for the year 2018-2019 and 2019-2020."

இதன்படி, இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்ட பின்வரும் பணியாளரை பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளர்களின் பெயர் மற்றும் பதவி | பணியேற்றநாள் | பணிவரன்முறை செய்யப்பட்டநாள் |
|---|---|---|---|
| 1. | திரு.க.சுப்ரமணியன், இளநிலைஉதவியாளர், தொழிலாளர் உதவி ஆணையர்(அமலாக்கம்) அலுவலகம், 3-ம் வட்டம், சென்னை-35. | 06.08.2020 முற்பகல் | 06.08.2020 முற்பகல் |

தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப்பணிகள் விதி 23(a)(i)-ன்படியும், தமிழ்நாடு அமைச்சுப்பணியின் கீழ் பொதுவிதி 32-ன்படியும் மேற்படி பணியாளர் இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்தநாள் முதல் மூன்றாண்டு கால தொடர் பணியில் இரண்டாண்டு கால தகுதிகாண் பருவத்தில் வைத்தும் உத்தரவிடப்படுகிறது. இத்தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர்களுக்கு அளிக்கப்படும் அடிப்படைப் பயிற்சியினை திருப்திகரமாக நிறைவு செய்ய வேண்டும் என்றும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படும் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

சம்பந்தப்பட்ட பணியாளரின் பணிப்பதிவேட்டில் இது தொடர்பான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டது எனச் சான்றளிக்கப்படுகிறது.

சி. ரேவதி 10/8/2021

தொழிலாளர் உதவிஆணையர்(அமலாக்கம்)
3ம் வட்டம், சென்னை-35.
10/8/21

<u>பெறுநர்:</u>

திரு.க.சுப்ரமணியன்,
இளநிலைஉதவியாளர்,
தொழிலாளர் உதவிஆணையர்(அமலாக்கம்) அலுவலகம்,
3-ம் வட்டம்,சென்னை-35.

<u>நகல்:</u>

1.இவ்வலுவலக அ பிரிவு இருப்புக்கோப்பு
2.பணிப்பதிவேடு

<u>நகல் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u>

1.தொழிலாளர் ஆணையர், சென்னை-6.
2.கூடுதல் தொழிலாளர் ஆணையர், சென்னை-6.
3.தொழிலாளர் இணை ஆணையர்-1, சென்னை-6.